# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| MCOP No. 164/2019 | நாள் – 04.02.2026 | சாட்சி – எ.ம.சா.1 |
|---|---|---|

**திரு. பாலாஜி, த/பெ. புருஷோத்தமன்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக நாச்சியார் கோவில் காவல் துறையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், சரக்கு வாகனத்தில் பயணிகளை ஏற்றியதாலும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்பது தான் எங்கள் நிலைப்பாடு என்றால் சரிதான். சரக்கு ஏற்றும் வாகனத்தில் கூலி தொழிலாளியாக அந்த வாகனத்தின் பணியாளராக பயணித்தால் காப்பீடு பாலிசியின் படி அந்த நபருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் செப்டிக் டேங்க் ஸ்லாப்புகளை ஏற்றிக்கொண்டு வாகனத்தில் பயணித்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தினேஷ்குமார், கணேஷன், தர்மசீலன் ஆகியோர் மேற்கண்ட சரக்கு வாகனத்தில் பயணிகளாக பயணித்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் பின்னால் அவர்கள் உட்கார்ந்து கொண்டு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் பயணிகளாக பயணித்தார்கள் என்று எவ்வித ஆவணங்களையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு விசாரணை செய்து அந்த விசாரணை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் விசாரணை அதிகாரி தேவை இல்லை என்பதால் நியமிக்கப்படவில்லை. தினேஷ்குமார், கணேஷன், தர்மசீலன் ஆகியோர் கருங்கல் ஸ்லாப்புகளை ஏற்றிக்கொண்டு அந்த ஸ்லாப்புகள் உடைந்துவிடாமல் இருப்பதற்காக அதன் பாதுகாப்பிற்காக அந்த வாகனத்தில் ஒரு தொழிலாளியாக சென்றார்கள் என்றாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. இழப்பீடு வழங்குவதில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யான காரணங்களை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.04 15:31:47 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*